1972 மார்ச் 8]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் 15 பேருந்துகள் இரவு நேரங்களில் கீழ்க்கண்ட 13 வழித்தடங்களில் செல்கின்றன :—

தங்கசாலை—எண்ணூர் ;

பிராட்வே—அம்பத்தூர் தொழிற்பேட்டை ;

தங்கசாலை—டன்லப் ;

திருவல்லிக்கேணி—இ. பெ. தொழிற்சாலை ;

இ. பெ. தொழிற்சாலை—பாரிமுனை ;

உயர்நீதிமன்றம்—டன்லப் ;

டன்லப்—விவேகானந்தர் இல்லம் ;

சுங்கச் சாவடி—திருவல்லிக்கேணி ;

மூலக்கடை—திருவல்லிக்கேணி ;

மூலக்கடை—அண்ணாசாலை ;

திரு. வி. க. நகர்—விவேகானந்தர் இல்லம் ;

அண்ணாசாலை—அடையாறு ;

அண்ணா சாலை—சைதாப்பேட்டை.

* 373 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the night Decker Bus going from Madras to Tiruchirappalli met with an accident on 22nd August 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) 22—8—1971-ல் சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்குச் செல்லும் இரண்டடுக்குப் பேருந்து மாமண்டூரைக் கடந்து 65/2 கிலோ மீட்டர் கல்லுக்கும் 65/4 கிலோ மீட்டர் கல்லுக்கும் இடையில் சென்று கொண்டிருந்தபோது சென்னையை நோக்கி எதிர்த் திசையில் வந்து கொண்டிருந்த தனியார் லாரி ஒன்றின் வலப் பக்கத்தில் மோதியது. அப்போது மழை தூரிக் கொண்டிருந்தது. எதிரே பொருட்கள் மங்கலாகத் தெரிந்தன. அன்றியும் இரு சைக்கிள் வண்டிக்காரர்கள் பேருந்துக்கு முந்திச் சென்று கொண்டிருந்தனர். விபத்து நேரிடுவதைத் தவிர்ப்பதற்காக அரசு போக்குவரத்து அலுவலர் மிகவும் வலப்பக்க

[1972 மார்ச் 8

ஓரத்திற்கு வண்டியைத் திருப்பினர். இதனுல் லாரியுடன் மோதல் ஏற்பட்டது. இந்த விபத்தில் அரசுப் பேருந்தில் எவரும் காயமுற வில்லை.

திரு கே. டி. கே. தங்கமணி : சார், அந்தக் குறிப்பிட்ட விபத்து நடந்த சமயத்தில் சாமர்த்தியமாக டிரைவர் வண்டியைத் திருப்பிய காரணத்தால்—அந்த லாரி டிரைவர் வெகு வேகமாக வண்டியை ஓட்டிய காரணத்தால்—சேதம் கம்மியாக ஆகியிருக்கிறது, என்பதை அரசு அறியுமா ? அந்த பஸ்ஸிலே இருந்த பிரயாணிகளில் நானும் ஒருவன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : We are happy.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிலே இருந்த காரணத்தால் எல்லா விவரங்களையும் அறிவார்கள். அது சம்பந்தமாக வழக்கு தொடரப்பட்டு அந்த வலவருக்கு ரூ. 75 அபராதம் விதிக்கப்பட்டு இருக்கிறது. அரசும் அவர் மீது நடவடிக்கை எடுத்து இருக் கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : அப்படி திறமையாக ஓட்டி, பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றிய அந்த டிரைவருக்கு ஏதாவது சன்மானம் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்தத் தகவல் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இப்படி அர சாங்க பஸ்களிலே ஆக்சிடெண்ட்கள் நடப்பதற்கு யார் அதிகமாகக் காரணமாக இருக்கிறார்கள் என்பதை ஆராய குழு அமைக்கப் படுமா ? சமீபத்தில் ஆரணியில் இரண்டு பஸ்கள் மோதி ஆக்சி டெண்ட் ஏற்பட்டு இருக்கிறது. பல காரணங்களால் விபத்துகள் ஏற்படுகின்றன. இவற்றை ஆராய ஒரு நிபுணர் குழு அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விபத்துக்கள் குறை வதைத்தான் இந்த அரசு விரும்புகிறது. அதைக் குறைப் பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்பது பற்றியும் அரசு அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து, அது சம்பந்தமாக தீவிரமான முடிவுகள் மேற்கொள்ள வேண்டுமென்று

1972 மார்ச் 8]

இருக்கிறோம். ஏனென்றால் இது வரையில் விபத்துகள் குறைந்து இருந்தது, திடீரென்று பிப்ரவரி மாதத்தில் அதிகமாகியிருக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் இப்படி விபத்துகள் நேரிடுவதைத் தவிர்ப்பதற்காக வேண்டிய எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அந்த டிரைவரின் திறமை நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை என்று சொன்னாலும், அந்த இடத்திலேயே இருந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தங்கமணி அவர்கள் எடுத்துக்கூறியதைக் கருத்தில் கொண்டாவது, அந்த ஓட்டுநருக்கு பரிசு வழங்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஓட்டுநருக்குப் பரிசு வழங்காவிட்டாலும், அவரைப் பதவியை விட்டு நீக்கிவிடாமல் இருப்பதே பெரிய பரிசாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையின் பேரில் அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

Ghee produced at Madhavaram Milk Project

* 374. *Q.*—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the quantity of ghee produced at Madhavaram Milk Project for the period 1970–71; and

(*b*) the steps taken to dispose them?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) 1969-70—23,238.240 கி.கி 1970-71—24,525.685 கி.கி.

(இ) சென்னை மாநகரில் மண்டல அலுவலகங்கள், பால் டிப்போக்கள் ஆகியவற்றின் மூலம் நெய் விற்கப்பட்டுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, அரசாங்க நெய்யை நானும் வாங்கிப் பார்த்தேன். பக்குவமாக அது காய்ச்சப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியும். அதை வாங்கி